★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 2உ செவ்வாய் (15—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 3உ புதன் (16—5—56) [இதழ் 285

வளரும் மக்கள் தொ[illegible]

உலக மக்கள் தொகை, இப்போதைய வேகத்தில் அதிகரித்துக் கொண்டு போனால், இன்னும் 500 ஆண்டுகளில் சஹாரா பாலைவனமும், வடதுருவ—தென் துருவப் பிரதேசங்களும் கூட, லண்டன் நகரைப்போல், மக்கள் கூட்டம் மிகுந்த இடமாகி விடக்கூடுமென வியன்னா மக்கள் தொகை நிபுணர் குறிப்பிட்டுள்ளாராம்.

'இப்போது, உலக மக்கள் தொகை ஆண்டில் $1\frac{1}{2}$ சதவிகிதம் அதிகரித்து வருகிறது; இந்த விகிதத்தில் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போனால், கி. பி. 2,000-வது ஆண்டில் உலக மக்கள் தொகை 500 கோடியாகவும், 2,500-வது ஆண்டில் 800 கோடியாகவும் ஆகிவிடும்' என்றும் அவர் கருதுகிறார்.

கண்டறியாதன காண்போம் வாரீர்!

'வள்ளுவர் நகர்' தரும் அன்பழைப்பு

இருண்ட கண்டத்தின் இன முழக்கம் கேளீரோ!

திராவிடரின் விடுதலைக்கு வழிகாண வாரீரோ!

(முகவை ஆர். எஸ். பாண்டியன்—நமது தனி நிருபர்)

வள்ளுவர் நகர், மே 15—

'வள்ளுவர் நகர்'—கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தளிக்கும் உயிர்த்திட்பம் செறிந்த ஓவிய சிற்பக்கலைக் கோவில்—இன்னிசை அரங்கம்—கூத்துமேடை—விஞ்ஞானக்கூடம்—அறிவுச் சோலையாம் கண்காட்சிச்சாலை—தினவெடுக்கும் திண்தோளர் பயிற்சி பெறும் பாசறை—விடுதலை விரும்பிகளின் கூடாரம்—மனித வாழ்வின் ஆராய்ச்சி மண்டபம் என்ற அளவில் வளர்ந்து நிற்கும் வள்ளுவர் நகர், வண்ணப்பணித்து 'வருக, வருக' வென அழைக்கிறது—அறிவு மங்கி, அகனல் கொற்றமும் கோலும் கொடியும் இழந்து, வளமிழந்து, செல்வம் பறிபோய், வாழ்விழந்து, வழி தவறி, விடுதலை கெட்டு, பெருமையும் புகழும் பட்டு நிற்கும் திராவிடரே! தென்னவரே! வாழ வழிகாண வாரீர்! என்று அழைக்கிறது.

புகழ் மங்காக் காவிரி மாலை அணிந்து, மலைக்கோட்டை மகுடம் சூட்டி, சிறந்த வரலாற்றை நினைப்பூட்டும் சிதைந்த கோட்டை கொத்தளங்களைத் தாங்கி நிற்கும் திருச்சி, திராவிட சமுதாயத்திற்கு வழிகாட்ட 'வள்ளுவர் நகரை'ப் பெற்றெடுத்திருக்கிறது. இங்கேதான, இன்னும் இருபத்திநான்கு மணி நேரத்திற்குப் பின திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2-வது மாநில மாநாடு துவங்குகிறது.

திராவிடச் சமுதாயத்திற்கு உண்மையான விடுதலையோடு கூடிய நிரந்தரமான முழு நல்வாழ்வைப் பெற்றுத் தருவதற்காக, திராவிடர்கள் அமைத்துள்ள போர்ப்படையாம் தி. மு. கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, தென்னாட்டின் வரலாற்றுச் சிறப்புக்குரிய நிகழ்ச்சி என்பதை எவரும் மறுத்திடத் துணியார்.

முதல் மாநில மாநாடு நடைபெற்று நாலரை ஆண்டுகள் கழிந்துவிட்டன. இந்த நாலரை ஆண்டுகளில் உருண்டுகொண்டேயிருக்கும் இந்த உலகம், எத்தனையோ எண்ணற்ற மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் சந்தித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★

மாநில மாநாடு:

திருவாரூரிலிருந்து தனி இரயில்

"17-5-56 காலை 4 மணிக்கு திருவாரூரிலிருந்து திருச்சிக்கு ஒரு தனி இரயில் வண்டி மாநாட்டுக்கு புறப்படுவதால் தோழர்கள் யாவரும் அந்த வண்டியிலேயே போக வேண்டுமென வேண்டுகிறேன்"

என்று, நாகை வட்ட தி. மு. கழகச் செயலாளர் இரா. விசயராகவன் அறிவிக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★

சிறகடித்துப் பறந்துபோய்விட்ட இந்த நாலரை ஆண்டுகள், உலகத்தின எதிர்காலததைப்பற்றி மக்களுக்கு நம்பிக்கையூட்டியிருக்கிறது! அதேபோது, அவர்கள் கொண்டிருந்த அவநம்பிக்கையை நீடிக்கவும் செய்திருக்கிறது!

பல்கோடி உயிரினங்களின் ஜனனத்தைப் பதிவு செய்திருக்கிறது! கோடானுகோடி உயிரினங்களுக்கு பிணயாத்திரை நடத்தி வைத்திருக்கிறது! பலருக்கு வாழ்வளித்துள்ளது—பலருக்குத் தாழ்வையும் தேடிக் கொடுத்திருக்கிறது! அறிவாற்றலைப் பெருக்கியிருக்கிறது—அறியாமையைத் தொடரச் செய்திருக்கிறது! ஆக்கத் திறனைக் கூட்டியிருக்கிறது—அழிவாற்றலையும் விரித்திருக்கிறது! செல்வம் மேலும் கொழிக்கச் செய்துள்ளது—சீரழிவும் செய்திருக்கிறது! எண்ணற்றோரைப் பெருமைப்படுத்தியும், பல்லோரைச் சிறுமைப்படுத்தியும் ஆட்டிப் படைத்திருக்கிறது! ஏற்றங் கொண்டோரை இறங்கிவரச் செய்திருக்கிறது — தாழ்ந்து கிடந்தோர் தலை நிமிர வழி வகுத்துள்ளது! ஆதிக்கபுரிகளைத் தகர்த்திருக்கிறது—சுதந்திரக் கொடிகளின எண்ணிக்கையை வளர்த்தும் இருக்கிறது!

இந்த நாலரை ஆண்டு காலத்தில் உலகின் மிகப் பெரிய வல்லரசு நாடுகள், இராட்சசமான அழிவாற்றல் கொண்ட அணு ஆயுதங்களைத் தங்கள் ஆட்சி பீடத்திற்கு அஸ்திவாரமாக அடுக்குவதில் வேகமாக ஈடுபட்டிருக்கின்றன அதேபோது, அணு சக்தியை மக்களின் நல் வாழ்விற்கான ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தவும் முற்பட்டிருக்கின்றன. 'கெடுபிடிப்போரைக்' கைவிட்டு, நெருக்கடிகளைத் தணித்து, அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்; சமாதானம் நீடிப்பதுபற்றி எங்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள்ளவேண்டும்,' என்ற உலக மக்களின் ஏகோபித்த கோரிக்கைகளுக்கு, உள்ள பூர்வமாக எந்தப் பெரிய வல்லரசும் உரிய காது கொடுக்கவில்லை; கவனம் செலுத்தவில்லை!

ஆயுதப் போட்டிகளில் தாராளமாக ஈடுபட்டிருக்கின்றன, அந்த வல்லரசுகள்! பிரிட்டனும்—பிரான்சும், பாளையக்காரர்கள் காலத்திய பத்தாம் பசலி ஏகாதிபத்தியப்போக்கிலிருந்து தங்களைத் திருத்திக்கொள்ளவில்லை—தங்கள் சாமராஜ்யங்களின் அங்கங்களாய் இருந்த பலசிறிய—பெரிய நாடுகள் அநியாய விலை கொடுத்து விலை மதிப்பில்லாச் சுதந்திரத்தை தாங்கள் தட்டிப்பறித்து வைத்திருந்த சுதந்திரத்தைப் பெற்றுவிட்ட பின்னரும்!

அமெரிக்கா, வேகமாகப் பேயுருக் கொடுத்துவரும் தனது மஞ்சள் பூதமாம் டாலரின் ஒளியை, 'பின்தங்கிய நாடுகளுக்கு உதவி' என்ற பெயரால், பல நாடுகளுக்குக் காட்டி அவற்றைத் தம் பக்கம் இழுக்க முயற்சித்திருக்கிறது—இரும்புப் பெட்டியைத் திறந்து காட்டி, அந்த நாடுகளின் இதயத்தில் குடியேறத் திட்டமிட்டிருக்கிறது அந்த மஞ்சள் பூதத்தின் கண்ணைப் பறிக்கும் ஒளி, பலரின் கருததையும் பறித்து, அமெரிக்க ஆதிபத்தியக்காரருக்கு தீய வெற்றிகளையும் பெற்றுத் தந்திருக்கிறது.

தாயக மக்களின் நல்வாழ்விற்காக, மகத்தான போர் வீரனாக விளங்கிய ஸ்டாலின், இந்தக் கடந்துபோன நாலரை ஆண்டில் இயற்கையெய்தியோரின் பட்டியலில்தான் அடங்குகிறார். அவருக்குப் பிறகு, ரஷ்யாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், உலகத்தின் தீவிர சிந்தனைக்குத் தீனியாக விளங்குகின்றன!

எப்படியோ, வல்லரசுகளுக்கு, அவை வல்லரசுகள் என்பதாலேயே இருந்த 'மவுசு' குறைந்திருக்கிறது! அவைகளின் இறுமாப்பு ஒடுக்கப்பட்டிருக்கிறது—ஓரளவிற்கேனும்! அதேபோது, கடந்த நாலரை ஆண்டுகள் பல சின்னஞ்சிறு நாடுகளின் கோழிக்குஞ்சு நெஞ்சங்களுக்கு உரமூட்டியிருக்கிறது.

சமாதானம், சமாதானம் என்ற குரல், இந்த நாலரை ஆண்டில் வலுத்திருந்தபோதிலும், இந்தக் குரலை உரக்க எழுப்புவோரே, ஆதிக்கப் போட்டியிலும், ஆயுதப் போட்டியிலும் மும்முரமாக ஈடுபட்டிருப்பதைக் காண முடிகிறது!

உலகின் தலைவிதியை நிர்ணயிக்கப்போகிறோம் என்று கூறி, ஜினீவாவில் கூடி, உருவான பலன் எதுமின்றி கலைந்து சென்றுவிட்ட நான்கு பெரும் வல்லரசுகளும், 'நாடக'மாடியதும் இந்த நாலரை ஆண்டுக் காலத்திற்குள்தான்!

ஏகாதிபத்தியவாதிகள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தங்களுக்கு இருக்கும் ஆதிக்கப் பிடிப்பைக் காப்பாற்றிக்கொள்ள, தங்கள் அசுர பலம் முழுவதையும் திரட்டி ஆதிக்கத்தை எதிர்ப்போரை அடக்கி ஒடுக்கிவிட பெருமுயற்சி செய்து, பெரும்பாலும் தோல்விகளையே தங்களின் பிற்போக்கான ராஜதந்திரங்களுக்கு வெற்றியாகப் பெற்றிருப்பதும இந்த நாலரை ஆண்டுக்காலத்தில்தான்!

இதேகாலத்தில், இருண்ட கண்டமென்று அழைக்கப்படும் பகுதிகளில் எல்லாம்கூட சுதந்திர உணர்வு கொழுந்துவிட்டெரிந்திருக்கிறது; விடுதலை விரும்பிகளின் வகையும் தொகையும் கொடூரமான அடக்குமுறைகளுக்கு பின்னும் வளராமல் இல்லை!

சுருக்கக் கூறின், கடந்த நாலரை ஆண்டுக் காலத்தில், உலகில், முற்போக்கு வாதிகளுக்கு—உண்மையிலேயே முற்போக்குக் கொள்கையில் விசுவாசம் கொண்டவர்களாயில்லாதிருந்தும், முற்போக்காளர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டவர்களுக்கும்கூட—வெற்றியும், பிற்போக்காளர்களுக்கு — ஆதிபத்தியவாதிகளுக்கு—உயர்ந்தோர் என்ற இருமாப்புக் கொண்டோருக்கு தோல்வியும் கிடைத்திருக்கிறது எனலாம்!

இந்த நாலரை ஆண்டுக் காலத்தில், தென்னாட்டின் விடுதலைக்காகப் போர்ப்பறை ஒலித்து, முரசுதட்டி, கொடி ஏற்றி, கூடாரம் அமைத்து, களம் கண்டு இடைவிடாது வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் தேசீய இயக்கமான தி. மு கழகம், திராவிட மக்களுக்கு நலனும் பலனும் நல்கும் பணிகளைச் செய்து, மகத்தான வெற்றிகளைப் பெற்றிருக்கிறது!

தி. மு. கழகத்தின் தோற்றம், வளர்ச்சிபற்றி வரலாறு கூறிடத்தேவை! முதல் மாநில மாட்டிற்குப் பிறகு, கழகம் திராவிடர்களின் முழுவிடுதலை என்ற நீண்டநாளைய லட்சியத்திற்காக மட்டுமின்றி, அவர்களின் தினசரி வாழ்வுப் பிரச்சினைகளுக்காகவும் போராடிப் பணி புரிந்திருக்கிறது.

1952 ஆகஸ்டு திங்களில் இந்தி அழிப்புப் போரில் ஈடுபட்டு, வெற்றி பெற்றது, கழகம்!

1953 ஜனவரி 4-ல், தோளிலே துணிகளைச் சுமந்து வீதி வீதியாகச் சுற்றி விற்று, கைத்தறி நெசவாளர் துயர் துடைக்கப் பாடுபட்டது, கழகம்!

1952-ல் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக சுமார் 30 ஆயிரம் ரூபாய் வரை நிதி வசூல் செய்து, கைத்தறி ஆடைகள் வாங்கி அளித்திருக்கிறது, கழகம்!

1953 ஜூலைத் திங்களில், மூன்று பெரும் உரிமைகளுக்காக மும்முனைப் போராட்டம் நடத்தி, ஆறுயிரம் பேர்களைச் சிறைக்கு அனுப்பி, தியாகத் தழும்புகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறது!

அதே போராட்டத்தில், துப்பாக்கிக் குண்டு—தடியடி—கண்ணீர்ப்புகை போன்ற கொடிய அடக்குமுறைகளுக்காளாகி, ஆறு தோழர்களின உயிர்களையும, பலரின கரம், கால், கண் என்றவகையிலும் விடுதலைக்காக காணிக்கை செலுத்தியிருக்கிறது!

1955 ஏப்ரலில், கழகம் மேற்கொண்டுள்ள பாதை, ஜனநாயகப் பாதை என்பதை உலகறிய முரசறைந்து கூறியது கழகம்—புதிய பொதுச்செயலாளராக தோழர் நெடுஞ்செழியனைத் தேர்ந்தெடுத்ததின மூலம்!

1956-ல், தமிழகத்தின் எல்லை உரிமை காக்க—மொழிவழி மாநிலம் அமைக்க—தமிழ் நாடு என்று தாயகத்திற்குப் பெயரிட—டில்லியின் அநீதியை எதிர்க்க அமைந்த சர்வகட்சி கூட்டணியில் பெரும் பங்கேற்று, பிப்ரவரி 20-ல், தமிழகமெங்கும் மகத்தானதோர் வேலை நிறுத்தம் செய்து காட்டியிருக்கிறது, கழகம்!

விடுதலை இலட்சியத்தை நோக்கி வீர நடைபோடும் கழகம், பாதையில் சந்திக்கும் எதிர்ப்புகளை எல்லாம் தச்சமென மதித்து, விரிக்கப்படுகிற வஞ்சக வலைகளில் வீழ்ந்து படாது, நெஞ்சுரத்தோடு, கடந்த நாலரை ஆண்டுகளில் பணி புரிந்திருப்பது கண்டு நாம் பெருமைப்படுகிறோம்! பூரிப்படைகிறோம்! நல்லறிவாளர் பாராட்டுகின்றனர்! திராவிட மக்கள் பெருமிதம் கொள்கின்றனர்! புதிய நம்பிக்கை பெறுகின்றனர்! நல்லன செய்ய, நல்வாழ்வளிக்க, நம்மை எதிர்பார்க்கின்றனர்—எதையும் நாம் செய்வோம்; செய்ய முடியும் என்பதாக எண்ணிக்கொண்டு!

ஆனால் இந்த நிலை—நாலரை ஆண்டுக் காலத்தில் நாம் பெற்றுள்ள பொறுப்புகள் மிகுந்த வளர்ச்சி நிலை, நம்மவர்களுக்குக் கலக்கத்தைத் தந்திருக்கின்றது!

(4-ம் பக்கம் பார்க்க)

வஞ்சக வலையாம் வடவர்தம் தொடர்பு

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15—5—'56 செவ்வாய்

திருச்சி அழைக்கிறது!

ஆம்! திருச்சி அழைக்கிறது! திராவிடத்தின் இளைஞர்களே—வீராங்கனைகளே!

மூப்படைந்த முதியவர்களை மறந்துவிடவில்லை — அவர்களையுந்தான் திருச்சி, வருந்தி வருந்தி அழைக்கிறது!

அழைப்பு, அறுசுவை உணவு உண்டு களிப்பதற்கல்ல! வீண் பொழுதுபோக்குக் கேளிக்கை கண்டு இன்புறுவதற்கல்ல — திருச்சி அழைப்பது!

காணத்தகும் காணுதவர்களைக் கண்டோம்; அவர்களுடன் அன்புடன் உரையாடினோம்; மகிழ்ந்தோம் என்ற அளவுடன் திருப்திகொள்வதற்கல்ல—திருச்சியின் அழைப்பு!

திராவிடத்தை என்றோ தீண்டிவிட்ட ஆரியம், திராவிடத்தின் இயற்கை எழிலை, வீரப்போக்கை, தனிப்பெரும் பண்பை, தன்னுருவாக்கிவரும் சோகக் கதையை புதிதாய் வருவோர் நல்லறிவு பெறவும், முன்னரே இணைந்திருப்போர் உறுதிப்பாடு கொள்ளவும், இன்னும் தரப்படவில்லையே—மேலும் வழங்கப்படவில்லையே—என ஏங்கிக் கூறுமவகையில், திகட்டாத கருத்து விருந்து தர, அழைக்கிறது திருச்சி!

முன்னாள் நமது மூதாதையர் உலகு புகழ கோலோச்சிய சிறப்பும், அவர்கள்தம் சிறப்பாட்சியில் குடிமக்கள் பெற்றிருந்த நல்வாழ்வும், அக்காலத்து மக்கள் அனைவரிடமும் குடிகொண்டிருந்த பரந்து விரிந்த மனித மனப்போக்கும், உள்ளத்தைத் தொட்டிழுக்கும் சொற்பொழிவு மூலமும், நெஞ்சை கொள்ளை கொள்ளும் நல்லிசை மூலமும், விழிகளுக்கும் விவேகத்திற்கும் அறிவுப் படையலாக அமையும் நாடகக் கலை மூலமும், ஆரியத்தின் சூதுமதியையும், திராவிடம் சீரழிந்த வரலாற்றையும், மீண்டும் நமது ஆயுட்காலத்திற்குள்ளாகத் திராவிடம் தலைநிமிர்ந்து வீர நடை நடப்பதற்கான தெளிந்த முறைகளையும், நமக்கு அறிவுறுத்த, நம்மை அழைக்கிறது, திருச்சி!

வெள்ளை ஏகாதிபத்தியம் தானமாக விட்டுச்சென்ற ஆட்சிபீடத்தில் அமர்ந்துகொண்டு, வட இந்திய ஏகாதிபத்தியம், திராவிடத்தைச் சுரண்டிவருகிறது. மேலும் சுரண்ட திட்டமிட்டிருக்கிறது என்ற வேதனைதரும வரலாற்றை நமக்கு விளக்கமுற எடுத்துக் கூறவும, இயல்பாக நம்மிடை உள்ள விடுதலை வேட்கைக்கு விசையூட்டவும் அன்பழைப்பு விடுக்கிறது, திருச்சி!

திராவிடர் இன்னும் உறங்கிக் கிடக்கவில்லை; பெருமைமிக்க தம் பண்பாட்டை, பாரம்பரியத்தை உணர்ந்து கொண்டனர். தம் முன்னோரின் வீரமிகுந்த வரலாற்றை உணர்ந்துகொண்டிருக்கின்றனர் என்பதை மட்டுமின்றி, தனித்தன்மை கொண்டதம் பாரம்பரியப் பண்பாட்டை உயிர்ப்பிக்க, காப்பாற்றி வளர்த்துச் செழிப்பிக்க—ஆற்றலும் அறிவும், வீரமும் ஆர்வமும் மிக்கதோர் படையும திரட்டியிருக்கின்றனர் என்பதை உலகிற்கு மட்டுமின்றி, உறங்கிக் கிடக்கும் ஊராளுவோருக்கு—'ஒரு சிலர்; நான்கைந்து பேர்' என்று கணக்குக் கூறும் கருத்துக் குருடர்களுக்கு உணர்த்த, 'திராவிடரே, தீரரே வாரீர்—வள்ளுவர் நகருக்கு' என்று அழைக்கிறது, திருச்சி!

திராவிடரின் அரசியல்—பொருளாதார—சமுதாயப் பிரச்சினைகளை ஆராய, விவாதிக்க, முடிவெடுக்க, தாயகப் பற்றுக் கொண்டோரைத் திருச்சி அழைக்கிறது!

திருச்சியில் நடைபெறும் தி. மு. கழக மாநில மாநாடு வரலாற்றுச் சிறப்பிற்குரியது என்று கூறுவது, சம்பிரதாயத்திற்காகக் கூறுவதாகாது.

பொதுவாக, மக்கள் மக்களாக வாழ, வழிகாண, அவர்கள் வாழ்வின் சகலதுறைப் பிரச்சினைகளையும், விவாதிக்கக் கூடிய பெருந்தன்மையை தி. மு. கழகத்தைத் தவிர வேறெந்த இயக்கமும் இன்று இந்த நாட்டில் பெற்றிருக்கவில்லை.

அரசியல், பொருளாதாரம், சமூகம், என்ற முப்பெரும் துறைகளாக மக்களின் வாழ்வைப் பிரித்து, அந்த ஒவ்வொரு பெரும் துறையைப் பற்றியும விரிவாக ஆராய்ந்து, அத்துறையைப் பொருத்த பிரச்சினைகளுக்குப் பரிகாரங்களைக் கண்டறிந்து கூறவேண்டும் என்ற எண்ணம், வேறெந்த அரசியல் கட்சிக்கும் இன்றையதினம் இல்லை என்பது முக்காலும் உண்மை.

பொது மனிதப் பண்பு திராவிட மக்களிடத்தில், தங்களின் பழம்பெரும் பாரம்பரியப் பெருமைக் கொப்ப வளரச் செய்ய, திருச்சி வழிகாட்டப் போகிறது. அதற்காகத்தான் அழைக்கிறது, திராவிடரை.

மாநில மாநாட்டில், நாட்டையும் உலகத்தையும் பாதித்து நிற்கும் பெரும் பிரச்சினைகளுக்கு மட்டுமின்றி, மக்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம், வழிவகை தேடப்படவும், கூறப்படவும் இருக்கிறது.

'கருத்து விருந்து' என்ற தலைப்பில், மக்களின் வாழ்வு-தாழ்வுப் பிரச்சினைகள் பற்றிய விளக்கங்களும, முடிவுகளும் தான் தரப்படவிருக்கின்றன.

ஓவியக் காட்சிகள், விஞ்ஞானக் கண்காட்சிகள் எல்லாம, மக்களின் வாழ்வைப் பற்றிய அடிப்படை நோக்கங்களில் ஒரு மகத்தான மாற்றத்தைப் பிறப்பிக்கச் செய்யும நோக்குடையவையாகும.

இன்னிசையும, நாடகங்களும, அத்துறைகளில் நமக்குள்ள வல்லமைகளை, அந்தக் கலைகளில் நாம் பெற்றுள்ள பூரணத்துவத்தை விளக்க எடுத்துக்காட்ட மட்டுமல்ல—'கலை, மக்களுக்காக' என்ற மிகச் சக்திவாய்ந்த தத்துவத்தை—கொள்கையை எடுத்துக்காட்டவும்தான்.

இத்தனை சிறப்புகளையும், தங்களுடையதாகக் கொள்ளத்தான்; திராவிடரை அழைக்கிறது, திருச்சி!

அழைப்பை ஏற்று, அவனியோரே அணிவகுப்பீர்!

சென்னையிலா பெரிய பால் பண்ணை?

இரண்டாவது திட்டத்திலா ஏற்பாடு செய்யப்படும்?

புதுடில்லி, மே 14—

36 கூட்டுறவுப் பால் சங்கங்களை அமைப்பதன் மூலம், நகரங்களுக்கும், பட்டணங்களுக்கும் பால விநியோகத்தை அபிவிருத்தி செய்வது, இரண்டாவது ஐந்தாண்டுத திட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பால் பண்ணை அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றும்! இதற்காக ரூ 21 கோடி செலவிடப்படுமாம!

தினம் ஒவ்வொன்றும் முறையே 500 மணங்கும், 250 மணங்கும் 150 மணங்கும் பால் சப்ளை செய்யக்கூடிய மூன்று வகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுமாம்.

கல்கத்தா, பம்பாய், சென்னை, டில்லி ஆகியவிடங்களில் பெரிய பால் பண்ணைகளும் அமைக்கப்படும் மற்றும், ஏற்கெனவேயுள்ள பால் பண்ணைகள், மேலும் அதிக அளவில் பால் சப்ளை செய்யக் கூடியதாக விரிவுபடுத்தப்படும். பால் போர்டுகளை அமைப்பதன் மூலம், பால் பண்ணைத் தொழிலின் அபிவிருத்தியை மேலும துரிதப்படுத்துவதற்கு வகை செய்யப்படும்.

பின்தள்ளப்பட்டோருக்கு தனி இடம்

மகராஜ் சிங் என்ற மக்கள் சபை உறுப்பினர் தலைமையில் 11 பேர்களடங்கிய அகில இந்திய பின்தள்ளப்பட்ட வகுப்புத் தூதுக் குழு ஒன்று, பிரதமர் நேருவை இன்று பேட்டி கண்டு, மக்கள் சபை, சட்டசபைகளுக்குத் தாழ்த்தப்பட்டோருக்கென இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், பின்தங்கிய வகுப்பு விசாரணை குழுவின் அறிக்கையைப் பிரசுரிக்க வேண்டுமென்றும் கோரும் மனு ஒன்றைத் தந்ததாகத் தெரியவருகிறது.

பிள்ளை அழுதும் பால் கிடைக்காதது ஏன்?

ஏமாற்றுகிறார்கள் என்று குமுறும் மந்திரிகள் சிந்திப்பார்களா?

"அழுத பிள்ளைக்குப் பாலும் சோறும் கிடைக்கும் என்பார்கள். சாதாரணமாக இது உண்மையாக இருந்தாலும், அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த உதாரணம் பொருந்தாது. அபிவிருத்தித் திட்டங்களில், அழுதவர்கள் இன்னும் அழுது கொண்டே இருக்கிறார்கள்; அன்று சிரித்தவர்கள் இன்றும் சிரித்துக்கொண்டே இருக்கிறார்கள். சிரித்து, காரியத்தைச் சாதிக்கும் தந்திரம் எல்லோருக்கும் தெரியாது; அதற்கு சுய செல்வாக்கு அவசியம்.

"மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, 'அபிவிருத்தித் திட்டங்களில், பம்பாய்க்குத் தெற்கே நீதி வழங்கப்படவில்லை' என்று குமுறுகிறார்.

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டதிலும் இதே குறையை எடுத்துக் காட்டினார்கள். 'முதலாவது திட்டத்தில் ஏமாந்துவிட்டோம் இரண்டாவது திட்டத்தில் விழிப்புடனிருப்போம்' என்று அன்று மந்திரிகள் சமாதானம் சொன்னார்கள்; சமாதானம் சொன்னவர்கள்தான் இன்றும் குமுறுகிறார்கள். அவர்களாக நியாயம் வழங்குவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். இன்று, கேட்டும் கிடைக்கவில்லை என்று கூப்பாடு போடுகிறார்கள்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வேயை எடுத்துக் கொள்ளுவோம்.

"இரயில்வே அபிவிருத்திக்காக 1,125 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். வடக்கில் 1,600 மைல நீளத்திற்குப் புதிய பாதை போடப்போகிறார்கள். ஆனால், தெற்கில் ஒரு மைல் நீளத்திற்குக் கூட புதிய இரயில் பாதை கிடையாது. இங்கு முக்கியமான நகரங்களையெல்லாம் இரயில் பாதையுடன் இணைத்துவிட்டார்களா? மேலும் புதுப் பாதைகள் போட இடமில்லையா?

"ஒரு ஜில்லாவில் பத்து தாலுகாக்கள் இருந்தால் ஐந்து தாலுகா நகரங்களுக்கு இரயில் வசதி கிடையாது. கோவை ஜில்லாவில் நிலைமை இப்படி என்றால் மற்ற ஜில்லாக்களில் இதைவிட மோசமான நிலைமைதான் நிலவிவருகிறது. இந்த இலட்சணத்தில்தான், புதிய இரயில் பாதையும் கிடையாது என்கிறார்கள்.

"முதலாவது ஐந்து வருடத் திட்டத்தில் கோவை—சாம்ராஜ் நகர் இரயில் பாதை அமைப்பதென்று சொல்லி, திட்டத்திலும் சேர்த்தார்கள். பிறகு, இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் இதை அமுல் நடத்துவதென்று கூறினார்கள். இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்திலும் இப்பாதை அமைப்பு சேர்க்கப்படவில்லை.

"இதற்கு ஏதாவது சமாதானம் சொன்னார்களா? அதுவும் கிடையாது. எந்த முதன் மந்திரி என்ன குறை சொன்னாலும் கடைசியில், 'நேரு பேசினார்; திட்டம் ஏகமனதாக அங்கீகாரம் செய்யப்பட்டது,' என்றுதான் செய்தியும் வருகிறது."

9—5—56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'அங்கே வசந்—இங்கே அவதி' என்ற தலைப்பில், 'யு ஆர்.' என்பவர் எழுதியுள்ள ஒரு பகுதிதான மேலே தரப்பட்டுள்ளதாகும்.

'மக்களுடைய முடிவுக்கு தலைவணங்குகிறேன்'

தகராறுள்ள பிரதேசத்தில் மீண்டும் தேர்தல் நடத்தலாம்'

வாக்கெடுப்பிற்கு பீகார் முதல்வர் தரும் ஆதரவு

பாட்னா, மே 13—

"மக்கள் விருப்பத்தை அறிய எண்ணுவது கூடவேகூடாது' என்று கருதி செயல்பட்டவர்கள் இன்று, தங்களின் ஏதேச்சாதிகாரப் போக்கு முறியடிக்கப்பட்டதும், 'மக்கள் கருத்தறிவோம் வாரீர்' என்று பேச முன்வந்திருக்கின்றனர்.

"பீகாரில் உள்ள சில பிரதேசங்களை மேற்கு வங்கத்திற்கு மாற்றவேண்டுமா என்பதை அந்தப் பிரதேச மக்களே முடிவுசெய்ய வேண்டும்" என்று, இப்போது பேசுகிறார், பீகார் முதன மந்திரி!

"அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் முடிவுக்கு தலைவணங்கத் தயாராக உள்ளேன்; அந்தப் பிரதேசத்தின் பிரதிநிதிகளாக மக்கள் சபையிலும், சட்டசபையிலும் வீற்றிருக்கும் உறுப்பினர்கள், தங்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்துவிட்டும்; பின்னர், அந்தப் பிரதேசம் மேற்கு வங்கத்திலா, பீகாரிலா இருக்க வேண்டும் என்ற பிரச்சினையை முன்வைத்து தேர்தல் நடத்தலாம். மக்கள், அப்பிரதேசங்கள் எங்கிருக்க வேண்டுமென விரும்புகிறார்களோ அங்கு, இணைத்துவிடலாம்,"

என்று பீகார் முதல்வர் கிருஷ்ண சின்ஹா: பிரதமர் நேருவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிடுகிறார் எனத் தெரியவருகிறது.

கிஷன்கஞ், பூர்லியா என்ற பீகாரின் பகுதிகளை, மேற்கு வங்கத்துடன் இணைப்பதைத் தாம் எதிர்ப்பதாகவும அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாராம்.

எண்ணமிருக்கிறதாம்!

தேக்கு மரத்திற்குப் பதிலாக 'சிப்போர்டு'கள் (மரத்துண்டுகள், மரத்தூள்களை எல்லாம் குழம்பாக அரைத்து 'பிளைவுட்'போல மெல்லிய பலகைகளாக ஊற்றிவிடுவது) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை கொடைக்கானல் பகுதியிலுள்ள மேல் பழனியில் துவங்கும் எண்ணமிருப்பதாக சென்னை விவசாய அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்திருக்கிறார்.

தொழில் துறைத் தகராறுகள் குறைந்ததா?

சோஷலிசபாணி சர்க்கார் தரும் விபரங்கள்

புதுடில்லி, மே 14—

தொழில் துறை உறவுகளில் 1956 பிப்ரவரி மாதத்தில் புதிதாக ஏற்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை 79 ஆக இருந்ததாம்!

ஆனால் தகராறுகளில் சம்பந்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்ததாம்—அதாவது முந்திய மாதத்தில் இந்த எண்ணிக்கை 51,729 ஆக இருந்தது குறிப்பிட்ட மாதத்தில் 39,289 ஆகக் குறைந்துவிட்டதாம்!

பரிசீலனை மாதத்தில் 74 தகராறுகள் முடிவடைந்தன; 33 வழக்குகளில் தொழிலாளர்களுக்கு முழு வெற்றியோ ஓரளவு வெற்றியோ கிடைத்தன; 25 வழக்குகளில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை; 15 வழக்குகளின் முடிவுகள் நிச்சயமற்றதாயிருந்தன; ஒரு வழக்கின் முடிவு தெரியவில்லை.

நஞ்செனத் தெரிந்தும் துஞ்சுவதாகுமா?

* * * * * * * * * * * * * * * * * * *

மாநில மாநாடு :

தலைமை நிலையம்— முகவரி மாற்றம்

மாநில மாநாட்டினையொட்டி தி. மு. கழகத் தலைமை நிலையம் [தற்காலிகமாக] 6—5—56 முதல் 27—5—56 வரை கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

முகவரி :

தி. மு. கழகத் தலைமை நிலையம்,
'வள்ளுவர் நகர்',
தி.மு.க. மாநில மாநாடு அஞ்சல்,
திருச்சி

போன் எண் :

மாநாட்டுப் பந்தல் : 666
தலைமை நிலையம் : 676

— தலைமை நிலையம்

* * * * * * * * * * * * * * * * * * *

தென்னாட்டில் அரிசி விலையைக்

கட்டுப்படுத்த முயற்சி?

5 இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்யப்படும் ?

தென்னாட்டில் திடீரென ஏறிய அரிசி விலையைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சியின் தொடர்ச்சியாக மணங்கு ரூ 16 வீதம் விற்கப் போதுமான அளவு அரிசி கையிருப்பு இருப்பதாக டில்லி விவசாய அமைச்சர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

தேவையைச் சமாளிக்க போதிய அளவு கையிருப்பு இருப்பதாகவும், விலையைக் குறைக்கவேண்டும் என்கிற அடிப்படையில் மேலும் 5 இலட்சம் டன் அரிசி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

செய்திச் சுருள்

★

பலகட்ட முறை விற்பனை வரி எதிர்ப்பு மாநாடு

6—5—56 காலை 10 மணிக்கு சென்னை—ஆண்டர்சன் தெரு, 40-ம் எண் கட்டிடத்தில் தமிழ்நாடு வர்த்தகக் கழகச் சார்பில, சென்னையில் நடைபெறவிருக்கும் மேற்படி 3-வது மாநில மாநாட்டின் அமைப்புக் கூட்டம் திரு. வி. வி. இராமசாமி எம் எல்.சி. தலைமையில் நடைபெற்றது.

பிரமுகர்கள் பலர் அடங்கிய வரவேற்புக் குழு அமைக்கப்பெற்று, திரு. எம். அங்காளப்ப (செட்டியார்) தலைவராகவும், திரு கே. கிருஷ்ணமூர்த்தி, திரு. ம. ப ச. ரத்னசாமி(நாடார்) பொதுச் செயலாளராகவும், ஏ. என். சீனிவாச(நாடார்) பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். மாநாட்டின் நோக்கம் பற்றி பிரசாரம் செய்ய திரு. கேசவலால் (சேட்) தலைவராகக் கொண்ட ஓர் பிரசாரக் குழுவும் நிறுவப்பட்டது.

சென்னை மாணவர் மன்றம்

6-5-56 பிற்பகல் 4 மணிக்கு மேல் மன்ற உறுப்பினர் பொதுக் கூட்டம், சென்னை-1 இரத்தின முதலி தெரு 17-எண்ணுள்ள இல்லத்தில், தோழியர் எஸ். கிருஷ்ணவேணி அம்மையார் தலைமையில நடைபெற்றது. தோழர்கள் மயிலை சிவமுத்து, எஸ் எஸ். அருணகிரிநாதர், மோகனசுந்தரம், விலவபதி, தணிகைஉலகநாதா, அழகுவேலனார், அன்புப்பழம்நீ முதலதமிழன ஆகியோர் பேசினர். பின்னர், வெள்ளிவிழாப் பொதுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. விழாவை மூன்று நாட்கள் கொண்டாடுதல் வேண்டும் என்றும், அப்போது மலர் ஒன்று சிறப்பான முறையில் வெளிவர வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ராயபுரம் இலக்கிய மன்றம்

6—5—56 காலை 10 மணிக்கு, மேற்படி மன்றச் சார்பில சிசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில், தோழர் நா. சங்கரன் தலைமையில், தோழர் இளவழகனார் திருக்குறள் வகுப்பைத் துவக்கி வைத்துப் பேசினர். தோழர் அ. ஞானசுந்தரம் சிறப்புரையாற்றினர்.

ஆண்டு விழாவும், அழகிரி படத் திறப்பு விழாவும்

6—5—56 மாலை 5 மணிக்கு, திருவல்லிக்கேணி ஐயாசாமி செட்டி தெருவில் கே. எஸ் பாண்டியன் படிப்பகம்—நூல் நிலையம், இலவச வாசகசாலை 3-ம் ஆண்டு நிறைவு விழாவும், அழகிரி படத் திறப்பு விழாவும் தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் நடைபெற்றது. தோழர் செல்லை கபிலன் படிப்பகத்தின் வரவு-செலவு அறிக்கையை வாசித்தார். தோழர்கள் எம். கே. மணி, மா.பா. சாரதி கோ. தாமோதரன் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் சொர்ணம் சிறிதுநேரம் பேசிய பின்னர், தோழர் கண்ணதாசன் அழகிரியின் படத்தைத் திறந்துவைத்து அரியதோர் சிறப்புரையாற்றினர்.

இரவு 8-30 மணிக்கு தில்லை ஆர் செயராமன் குழுவினரின் இன்னிசை நடைபெற்றது.

திண்டுக்கல் 'பத்திரிகை வாசகர்கள் சங்கம்'

9—5—56 மாலை 6 மணிக்கு திண்டுக்கல் மலையடிவாரம் காந்தியார் பூங்காவில் திரு. பி. சுப்புராயலு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி சங்கம் அமைக்க முடிவு செய்யப்பட்டு, தோழர்கள் தி. நந்தகோபால், ஜி. எஸ் கோபால் கன்வீனர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்திங்கள் இறுதிக்குள் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

விருதுநகர் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றம்

6—5—56 காலை 10 மணியளவில், இம்மன்றத்தின் 8-வது விவாத அரங்கு, திரு. சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது 'மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது' என்ற பொருள் பற்றிய சொற்போரில் திருவாளர்கள் சங்கரன், விவேகானந்தன், சந்திரசேகரன், போஸ், இராமசாமி, சங்கரநாராயணன், சீனிவாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். வாக்கெடுப்பில் விவாதத் தீர்மானம் தோற்றது.

சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயரிடவேண்டுமெனக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழ் விழா

5-5-56-ல், திருக்கழுக்குன்றம் அடுத்த தேசுமுகப்பேட்டையில், திரு. எம். எஸ். மணி தலைமையில், முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது. தோழியர் அருள்மொழி, தோழர்கள் மு இராசமாணிக்கம், க. குருசாமி, சு. குருநாதன், ந. நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் ந ஆறுமுகம் குழுவினரின் இசை விருந்தும், முத்தமிழ் மன்றத்தினரின் 'நச்சுக்கோப்பை' நாடகமும் நடைபெற்றது.

* * * * * * * * * * * * * * * * * * *

மாநில மாநாடு

அழகிரி உணவு விடுதி

மாநில மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு மிகவும் வசதியாகவும், நேர்த்தியாகவும் உணவு அளிக்கும் ஏற்பாட்டினை ராபி குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

மாநாட்டுப் பந்தலையடுத்து இந்த உணவு விடுதி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டிற்கு வருகைதரும் பொதுமக்கள் அழகிரி உணவு விடுதியில் ருசியான உணவினை மேற்கொள்ளலாம்.

நாடெங்கும் மே தின விழா

★

திருப்பூர் :

6—5—56 மாலை 6-30 மணிக்கு நொய்யல் நதி மைதானத்தில், திருப்பூர் தி மு. கழகச் சார்பில் மே விழாப் பொதுக்கூட்டம் தோழர் இரா. பாலசுந்திரம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தலைமை உரைக்குப் பின் தோழர்கள் சு. துரைசாமி, டி. நடராசன், இட்டப்பன், கணேசன் ஆகியோர் மே விழாவின் அவசியம் பற்றிப் பேசினர். பின்னர் தோழர்கள் முத்தரத்தினம், கோவை-செழியன் ஆகியோர் மே விழாவில் தி. மு. க. பங்கு பற்றியும், இன்றைய அரசியல் நிலைமை பற்றியும் விளக்கவுரையாற்றினர்.

அக்காமலை எஸ்டேட் :

3-5-56 மாலை 6-மணியளவில், வால்பாறை வட்டம் அக்காமலை எஸ்டேட் தி. மு. கழகச் சார்பில் மே தின விழா, தோழர் காசமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இராமசாமி, ஆ. க. வேலவன் ஆகியோர் மே தினம் குறித்தும், மாநில மாநாடு குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

வால்பாறை :

6-5-56 காலை 10-மணிக்கு வால்பாறை வட்டத்துடன் இணைக்கப்பட்ட 26 கிளைக் கழகங்களின் சார்பில், மே தின விழா மிகச் சிறப்பான முறையில், வால்பாறை காந்தி மைதானத்தில், தோழர் ஆ. க. வேலவன் தலைமையில் நடைபெற்றது. தோழர் வி. சண்முகநாதன் சொற்பொழிவாற்றினர்.

தாராவி-பம்பாய் :

1-5-56 இரவு 7-மணியளவில், சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றச் சார்பில், 'அன்பகத்'தில், தோழர் செல்லத்துரை தலைமையில் மே விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. துரை, மா. இரா. குறள்தாசன் ஆகியோர் மே தினம் பற்றிப் பேசினர்.

தாழ்த்தப்பட்டோருக்கு வேலைகள்

வேலையளிப்பு நிலையங்களின் சாதனை!

புதுடில்லி, மே 14—

இந்தியாவிலுள்ள வேலையளிப்பு நிலையங்கள், 1956 மார்ச் மாதத்தில், 2,368 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், 272 தாழ்த்தப்பட்ட குடியினருக்கும் வேலை தேடித் தந்தன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த மொத்தம் 13 801 பேர் வேலையளிப்பு நிலையங்களில் பெயர் பதிவு செய்துகொண்டனர் முந்திய மாதத்தில் பெயர் பதிவானவர்களின் மொத்த எண்ணிக்கை 13,762 முந்திய மாதத்தில் இவர்களில் மொத்தம் 2,609 பேருக்கு வேலை தேடித் தரப்பட்டது.

வேலை தேடித் தரப்பட்டவர்களில், 1,088 பேர் மத்திய சர்க்காரிலும், 670 பேர் மாநில சர்க்கார்களிலும, 610 பேர் சர்க்கார் சம்பந்தமில்லாத நிறுவனங்களிலும வேலையில் அமர்த்தப்பட்டனர்.

இப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு, 1956 பிப்ரவரி மாதத்தில் 926 இடங்களும், இம்மாதத்தில் 985 இடங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. அவற்றில், 830 இடங்கள் மத்திய சர்க்கார் இலாகாக்கள் தகவல் அறிவித்தவை; 138 இடங்கள் மாநில சர்க்கார் இலாகாக்கள் தகவல் அறிவித்தவை; 17 இடங்களே இதர முதலாளிகள் தகவல் அறிவித்தவையாகும் ஒதுக்கப்பட்ட இடங்களில் 522 இடங்கள் இம்மாதம் பூர்த்தி செய்யப்பட்டன. அவற்றில 439 இடங்கள் மத்திய சர்க்கார் இலாகாக்களிலும், 72 இடங்கள் மாநில சர்க்கார் இலாகாக்களிலும், 11 இடங்கள் சர்க்கார் சம்மந்தமற்ற இதர முதலாளிகளின்கீழும் உள்ளவை ஆகும். நிலையங்களின் அன்றாட பெயர் பதிவுப் புத்தகங்களில் மாத இறுதியில் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 68,287 பேர் பதிவாகியிருந்தனர்.

இம்மாதம், மொத்தம் 333 இடங்கள் தாழ்த்தப்பட்ட குடியினருக்காக ஒதுக்கப்பட்டிருந்தன; இவற்றில் 55 இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. இப்பிரிவில தகவலறிவிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட இடங்களில், 328 இடங்கள் மத்திய சர்க்கார் இலாகாக்களும், 3 இடங்கள் மாநில சர்க்கார் இலாகக்களும், இரண்டே இடங்கள் சர்க்கார் சம்பந்தமற்ற இதர நபர்களும் தகவலறிவித்தவையாகும். இப்பிரிவில், மாத இறுதியில், நிலையங்களின் அன்றாட பெயர் பதிவுப் புத்தகங்களில் மொத்தம் 6,454 பேர் பெயர் பதிவாகியிருந்தனர்.

திருமணம்

சென்னை 18-வது வட்ட தி மு.க. துணைச்செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி—தோழியர் கோமளா திருமணம் 29-4-56 காலை 9 மணியளவில், தோழர் மா. நன்னன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், இளம்பரிதி, ஆர். டி. அரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பிறப்பு

சோபனபுரம் தோழர் வ. இலக்குவன் அவர்கள் துணைவி பாக்கியம் அம்மையார், 1—5—56ல் ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; அம்மகவுக்கு சோபனபுரம் தி மு கழகத் தோழர்களால் 'கலைச் செல்வி' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 1 வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

அனுதாபம்

கொல்லுமாங்குடி தி. மு. கழகப் பொருளாளர் தோழர் கே. முத்துமணி 2-5-56-ல் மாரடைப்பினால் உயிர்நீத்தார்; அவரது குடும்பத்தினருக்கு கொல்லுமாங்குடி தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது

* * * * * * * * * * * * * * * * * * *

தலைமைக் கழகம் : அறிக்கை—7/56

பொதுத் தேர்தல் குறித்து வாக்கெடுப்பு

பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொண்டு போட்டியிட வேண்டுமா அல்லது வேண்டாமா எனபது குறித்து, மாநில மாநாட்டிற்கு வருகை தருவோரின் பொதுவான கருத்தை அறியும் வாக்கெடுப்பு முறை, **19—5—56** சனியன்று காலை **6** மணியிலிருந்து மாலை **6** மணிக்குள் நடைபெறும். நுழைவுச் சீட்டு உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமைச் சீட்டு தரப்படும்.

தி. மு. கழகம்
பொதுத் தேர்தலில் போட்டியிட

வேண்டு	
வேண்டாம்	

இப்படி அமையும் சீட்டில் அவரவர் விருப்பத்திற்கிணங்க எதிரிலுள்ள கட்டத்தில் X அடையாளம் இட வேண்டும்.

மாநாட்டுப் பந்தலில் தனியே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் வாக்குரிமைச் சீட்டைப் போட வேண்டும்.

'அறிவகம்,'
சென்னை—13
2—1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

* * * * * * * * * * * * * * * * * * *

தீண்டாமை கடைபிடித்த இரு 'சாதி இந்துக்கள்' கைது

குவாலியர், மே 12—

தீண்டாமை அனுஷ்டித்ததற்காக இங்கு, போலீசார் இரண்டு சாதி இந்துக்களைக் கைது செய்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

ஒரு திருமண விருந்தில் கலந்து கொள்ளக்கூடாது என தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவரை அந்த இரு சாதி இந்துக்களும் தடுத்தனராம்.

கைதான இருவரும் பின்னர் ஜாமீனில்வெளிவந்திருக்கின்றனர்.

பெயர் சூட்டல்

6—5—56 காலை 9 மணியளவில், பம்பாய்—தானா தி. மு. க. பொருளாளர் தலைமையில், கழக உறுப்பினர் தோழர் பி மாடசாமி அவர்களின் ஆண் மகவுக்கு 'மதிவாணன்' எனப் பெயர் சூட்டப்பட்டது இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்

நெஞ்சக் குருதியை நிலத்திடை வடிக்கவும்

...ளுவர் நகர்’ தரும் அன்பழைப்பு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த நாலரை ஆண்டுக் காலத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள், தங்களின் கீழ்த்தரமான ஆதிபத்திய ஆசைகள்—காட்டுமிராண்டித்தனமான சுரண்டல் நோக்கங்கள்—கேவலமான அரசாட்சி முறைகள் இவற்றிற்கு, திராவிடத்தைப் பலியாக்கிக் கொண்டிருக்கும் கொடுமையை நீடித்து நிலைபெறச் செய்வதற்காகப் புதிய புதிய பாடங்களைக் கற்று வருகின்றனா! கழகம் எழுப்பும் விடுதலை முழக்கம், தங்களின் ஆதிபத்திய ஆசைக்கு வேட்டு வைப்பதை உணர்ந்து ஓலமிட்டு வருகின்றனர்! வடக்கையும் - தெற்கையும் இணைத்துவிட பெரிய பாலங்களை அமைக்க முயற்சித்தனர்! தாங்கள் திராவிடா மீது செலுத்திக் கொண்டிருக்கும் தெளிவான ஏகாதிபத்திய ஆதிக்கத்தை மூடி மறைக்க, ‘சர்வதேசப் புகழ்’ எனும் திரைச்சீலையைத் தேடியலைகின்றனா! திராவிடா கிளர்ந்தெழும்போது அவர்களை தங்களின் மிருக வெறிக்குப் பலியாக்கினால், நியாயவான்கள் எவரும் வெளியிலிருந்து, இங்கு நடைபெறும் கொடுமைகளை குறித்து வாய்திறக்கக் கூடாது என்பதற்காக, பல நாட்டவருடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றனா! தங்கள் ஆதிக்கத்தைத் தெற்கில் நிலை நிறுத்த, சகலவிதமான முஸ்தீபுகளையும், நடவடிக்கைகளையும் தீவிரமாகச் செய்திருக்கின்றனர்!

வேடிக்கை என்னவெனில், இத்தனை பெரிய முயற்சிக்குப் பிறகும், வடக்கு வேறு—தெற்கு வேறு என்ற நிர்மலமான உண்மையை மூடி மறைத்துவிட முடியவில்லை. அவர்களால்!

வடக்கும் — தெற்கும் என்ற இயற்கையான பிரிவினை மனப்போக்கு, தெற்கிலும் சரி, வடக்கிலும் சரி, வளர்ந்தே இருக்கிறது!

தெற்கு, நிமிர்ந்து நின்று, நியாயம்கோரும் நிலைபெற்றிருக்கிறது! திராவிடத்தில், தமிழகம் தவிர இதர மும்மொழிப் பகுதிகளிலும் கழக முழக்கம், காங்கிரசார் மூலமே நிறம்பட நடந்தே வந்திருக்கிறது!

இம்மட்டுமோ? தி. மு. கழகம் ஏற்றுக்கொண்டிருக்கிற மொழிவழி மாநிலம் என்ற கோரிக்கைக்காக, இந்தியத் துணைக் கண்டமெங்கும், சிறப்பான கிளர்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன! சீக்கியரும்—மராட்டியரும், வங்காளியரும்—ஆந்திரரும், இந்த மொழிவழிக் கிளர்ச்சியின் முன்னோடிகளாயிருந்து, ஆயிரக்கணக்கில் சிறைபுகுந்து, நூற்றுக்கணக்கில் உயிர் பலிதந்து, மொழிப்பற்றின் வல்லமையை உணர்த்தி, புகழ் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

என்றுமே ஒன்றாயிருந்திராத இந்தியத் துணைக் கண்டத்தை ஒன்றாக்கிவிட பகற்கனவு காணும் பண்டிதரின் ‘கனவு நிலை, சிறிது சிறிதாகக் கலைந்துதான் வருகிறது. இன்று மருளமருள உருட்டி விழிக்கும் அவர், சீக்கிரமே உணரத்தான் போகிறார்—‘இந்தியா’வை ஏக இந்தியாவாக ஆக்கிட முடியாது என்பதை!

இத்தனை அருமையான பின்னணியினூடேதான், கழகத்தின் 2-வது மாநில மாநாடு நடைபெறுகிறது.

திராவிடருக்கு விடுதலை கோரி கழகம் அறவழி நின்று போராடி வருகிறது.

ஆனால், நாகர்கள்—கரேன்கள் — பகதூனியர்கள் — அல்ஜீரியா, மொராக்கோ, டுனீஷியா, சைப்ரஸ், கென்யா, தங்கனியாகா, மேற்கிந்தியத் தீவுகள், மலேயா, சிங்கப்பூர் இன்னும் எத்தனையோ சின்னஞ்சிறு நாட்டு மக்கள்—எல்லாம். ஒரு சில நாட்டவரைத் தவிர, நியாயங்களை—தங்கள் உரிமைகளை—சுதந்திரத்தை - விடுதலையை நிலைநாட்ட, அறவழி பயன்தராது போய்விடவே, நேரிடையாகவே போரிடத் துவங்கியுள்ளனர்.

நமது கழக மாநாடு கூடும் நேரத்தில் வட ஆப்பிரிக்காவில் விடுதலை கோரி நிற்கும் அல்ஜீரிய மக்கள், தினந் தினம், ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் நூற்றுக்கணக்கில் வீரர்களைப் பலி தந்துகொண்டிருக்கும் நிலையைக் காண்கிறோம். அநியாய விலை தந்தேனும், விலை மதிப்பில்லா விடுதலையைப் பெற்றுவிட, அந்த நாட்டவர் துடித்து நிற்கின்றனர்!

அங்கெல்லாம் கொழுந்துவிட்டெரியும் சுதந்திர உணர்ச்சி நமது வீரத்திற்கு—பரம்பரைப் போர்க்குணத்திற்கு அறைகூவல் தந்து கொண்டிருக்கிறது!

திராவிடரே! தீரரே! தாயகத்தின் சிறுமை பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட குருதியோட்டமுடையோரே! — திராவிடத்தை வடவர் பிடியிலிருந்து விடுவிக்க, கண் முன்னால் பட்டப் பகலில் வழிப்பறி செய்யப்படும் செல்வங்களைப் பாதுகாக்க—திராவிடத்தை உலகில் முதல்தரமான நாடாக்க, அதன் பெருமைக்குரிய வீரம் செறிந்த பண்பு காக்க—வீரரே! நாட்டுப் பற்றுடைய நல்லோரே! ‘வருக, வருக’வென அழைக்கிறது. வள்ளுவர் நகர்! — தி. மு. கழக மாநில மாநாட்டில் கலந்து கொள்ள!

மாநாட்டின் சிறப்பியல்புகளைத் தான் நண்பர் வில்லாளன் தொடர்ந்து எழுதிவந்தாரே, படித்திருப்பீர்களே!

சிறப்பு, மற்றுமொன்று உண்டு; முதல் மாநாட்டில், நமது அண்ணா அவர்கள், ‘திராவிட நாடு வேணடுமா — வேண்டாமா என்பது குறித்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மக்களிடையே ஒரு வாக்கெடுப்பு நடத்தலாம்,’ என்று கூறினார்கள்.

இப்போது, இந்த மாநில மாநாட்டில்; ஒரு ‘வாக்கெடுப்பு’ நடைபெறவிருக்கிறது; திராவிட நாடு பெற, உள்ள ஒரே ஜனநாயக வழி—ஓட்டை உடைசல்கள் உள்ளது தான் என்றாலும் — ஆளவந்தாா்களின் தேர்தல்தான்! இந்தத் தேர்தலில், தி. மு. கழகம் கலந்து கொள்வதா வேண்டாமா என்று, மே திங்கள் 19-ந் தேதி மாநாட்டிற்கு வருவோர் அனைவரும் வாக்களிக்கலாம்.

வாக்கெடுப்பில் கலந்துகொண்டு சிறப்பிப்பது திராவிடர்தம் கடமையல்லவா? இதுவரை, இதுபோன்ற ஒரு அப்பட்டமான ஜனநாயக முறையில் முடிவுகளை மேற்கொண்டவர் எவர் உண்டு, இந்த நாட்டில்? கண்டறியாததாயிற்றே!

இதுபோன்ற கண்டறியாதன காணத்தான், ‘வாரீர்’ என்று அழைக்கிறது, வள்ளுவர் நகர்! கண்டறியாத காட்சிகள் மட்டுமல்ல—கண்டறியாத முறையில், இதுவரை கண்டறியாத முடிவுகளையும் காணத்தான், ‘வாரீரோ, திராவிடரே!’ என்று அழைக்கிறது, வள்ளுவர் நகர்!

பொதுத் தேர்தல் பற்றி நேரு

புதுடில்லி, மே 14—

மக்கள் சபையின் இன்றையக் கூட்டத்தில், திட்டமான தேதிகளில் தேர்தல்களை நடத்த வேண்டுமென எதிர்க்கட்சியினர் வலியுறுத்தியபோது, பிரதமர் நேரு கூறியதாவது:—

“அடுத்த பொதுத் தேர்தல்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தை அனுசரித்து நடக்கவே சர்க்கார் எண்ணங்கொண்டுள்ளனர்; ஆனால், திட்டமான தேதி எதுவும் வகுக்கப்படவில்லை. பொதுவாக அடுத்த ஆண்டுத் துவக்கத்தில், முதல் மூன்று மாத காலத்திற்குள் தேர்தல்கள் நடைபெறவேண்டும். தேர்தல் கமிஷனருடன் கலந்தாலோசித்து தேதிகளை சர்க்கார் வகுத்து வருகிறது. எனவே, அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்குள் நிச்சயமாகத் தேர்தல்கள் நடைபெறும்.”

★★★

மாநில மாநாட்டில்!

★

சிறப்புத் தலைப்புகள் மீதும், தீர்மானங்கள் மீதும்

பேசுவோர்:

★

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்	மு. கருணாநிதி
கே. ஏ. மதியழகன்	க. அன்பழகன்	கண்ணதாசன்
சி. பி. சிற்றரசு	டி. கே. சீனிவாசன்	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். எஸ். இளங்கோ	கி. மனோகரன்	காஞ்சி—கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து	தில்லை-வில்லாளன்	கா. அப்பாதுரையார்
ப. உ. சண்முகம்	எம். எஸ். இராமசாமி	அரங்கண்ணல்
அருண்மொழி	ஏ. கோவிந்தசாமி	அ. பொன்னம்பலனார்
இரா. சு. தங்கப்பழம்	எம். பி. சுப்பிரமணியம்	ஆர். எஸ். பாண்டியன்
கே. கே. நீலமேகம்	கே. வி. கே. சாமி	அலமேலு அப்பாதுரை
பி. ஆர். கோகுலகிருஷ்ணன்	டி. கே. பொன்னுவேலு	அலிசேக்மன்சூர்
பூங்கோதை	பொற்செல்வி	ப. கண்ணன்
மணிமொழியார்	எஸ். அப்பாவு	கோவை-செழியன்
வாணிதாசன்	சுரதா	எம். எஸ். சிவசாமி
க. அறிவழகன்	எஸ். எஸ். தென்னரசு	மாறன்
ஈழத்தடிகள்	வி. ஜி. இராசையா	இளமுருகு
டி. வி. நாராயணசாமி	வி. எஸ். கோவிந்தராசன்	என். ஜீவரத்தினம்
கே. கோவிந்தசாமி	சி. டி. தண்டபாணி	கே. ஏ. கிருஷ்ணசாமி
ஜி. பராங்குசம்	ஏ. கே. வில்வம்	ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். வி. லிங்கம்	ஜெபக்கனி	சி. வி. இராசகோபால்
பி. என். இராமானுசம்	டி. சண்முகம்	தமிழரசு
க. நெடுஞ்சோழன்	எஸ். வேதரத்தினம்	சிற்றுளி-சுப்பிரமணியம்
சி. வி. எம. அண்ணாமலை	ஏ. எல். சி. கிருஷ்ணசாமி	போளூர்-சுப்பிரமணியம்
முல்லை சத்தி	இளம்பரிதி	கே. எம. கண்ணபிரான்
ஆர். பாலகுருசாமி	வி. முனுசாமி	ஏ. கே. சாமி
வி. சிவப்பிரகாசம்	குடவாசல்-கிருஷ்ணமூர்த்தி	ச. சிவப்பிரகாசம்
இரா. சாமபசிவம்	பொன். சொக்கலிங்கம்	எஸ். ஏ. இராசமாணிக்கம்
இ. ல. மா. சவுந்திரபாண்டியன்	கே. எஸ். சந்தானம்	வி. சண்முகாதன்
வி. எம். ஜான்	டி. பி. அழகமுத்து	பெங்களூர் எஸ். வி. பதி
கே. டி. எஸ். மணி	வி. சின்னத்தம்பி	ப. நாராயணன்
கருத்தோவியன்	சி. முனுசாமி	குளித்தலை—முத்துகிருஷ்ணன்
தா. ஆவுடையப்பன்	ப. இராமலிங்கம்	தூத்துக்குடி-நடராசன்
சி. ஆர். பாலசுந்தரம்	தாண்டவன்	குப்புசாமி
இலங்கை-அதிமணி	பம்பாய்-தியாகராசன்	டி. எம். பார்த்தசாரதி
சா. அமீது	உ. பில்லப்பன்	பு. இராமசாமி
சமதர்மம்	மா. தங்கவேலர்	சாமி பழனியப்பன்
இராம. சுப்பையா	டபிள்யூ. கே. துரைசாமி	சித்தூர்-பார்த்தசாரதி
முல்லை வடிவேலு	எஸ். கந்தசாமி	திருப்பத்தூர்-நடேசன்
வி. டி. அண்ணாமலை	வகாப்	நாகசுந்தரம்
டாக்டர் அருணாசலம்	ஏர்வாடி அப்துல்காதர்	கோடீஸ்வரராவ்
வன்னியபெருமாள்	எஸ். எஸ். பி. லிங்கம்	மேத்தா
சிவசண்முகசுந்தரம்	என். கிட்டப்பா	அடைக்கலம்
ஆ. உ. இராமநாதன்	குன்றத்தூர் - சம்பந்தம்	கோ. இளவரசு
மு. புரட்சிமணி	இளஞ்சேரலாதன்	ஆர். டி. அரசு
ஒளிஅழகன்	கலையழகன்	டி. ஆர். சுப்பிரமணியம்
திருச்சி-நெடுமாறன்	ஏ. தமபுசாமி	சிறுமி பானுமதி

★★★

தமிழில் நகரசபை அலுவல்கள்

கொழும்பு, மே 15—

வருங்காலத்தில் தமிழிலேயே அலுவல்களை நடத்துவதென யாழ்ப்பாண முனிசிபல் கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாம்.

இதுவரையில் அதன் அலுவல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் நடைபெற்று வந்துள்ளன.

துணிக்கு வரி ரத்து!

புதுடில்லி, மே 15—

‘மோட்டா’த் துணியின் விலை மதிப்பின்மீது தற்போது விதிக்கப்படும் 6¼ சதவிகித வரியை உடனடியாக ரத்து செய்வதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

உதகையில் சட்டசபை கூட்டம் நடைபெறுமா?

முடிவு செய்யப்படவில்லை என முதலமைச்சர் கூறுகிறார்

சென்னை, மே 14—

‘கோடை காலத்தில், சட்டசபைக் கூட்டத்தை உதகமண்டலத்தில் நடத்துவது பற்றி உத்தியோகபூர்வமாக ஒரு முடிவும் செய்யப்படவில்லை’ என்று முதலமைச்சர் காமராசர் கூறியுள்ளார்.

‘இதுபற்றி முடிவு செய்யுமுன்னர், சட்டசபை உறுப்பினர்களின் கருத்துக்களையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்’ என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாம் வேண்டியதுதான்

சென்னை, மே 14—

“நிலவுடைமைக்கு ஏதாவது ‘வரம்பு’ இருக்க வேண்டியதுதான்; ஏதாவது ஒருவழியில் அதைக் கொண்டுவரவேண்டியதுதான்,” என்று, முதலமைச்சர் காமராசர் கூறியுள்ளார்.

நிதி உதவுக!

கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி உதவி தருமாறு மாநில சர்க்கார்களுக்குத் திட்டக்குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

அஞ்சோம்! வெஞ்சமர் புரிய வீரரே வாரீர்